**இன்றைய வேளாண் செய்திகள் - 20.01.2015**

# 9 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

மதுரை மாவட்டத்தில் 9 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திங்கள்கிழமை திறக்கப்பட்டன. இங்கு சன்னரகம் குவிண்டால் ரூ.1,470-க்கும், பொதுரகம் குவிண்டால் ரூ.1,410-க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் பெரியாறு பாசனத் திட்டத்தில் இருபோக சாகுபடி பகுதியின் முதல்போகத்தில் மதுரை வடக்கு, மதுரை கிழக்கு, வாடிப்பட்டி ஆகிய தாலுகாக்களில் ஏறத்தாழ 45 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்வது வழக்கம்.

நடப்பு ஆண்டில் குறுவை சாகுபடியின்போது ஓரளவுக்கு மழை பெய்ததாலும், பெரியாறு பாசனத் திட்டத்தில் தண்ணீர் திறந்துவிட்டதாலும் முதல்போக சாகுபடி அறுவடை நடைபெற்று வருகிறது. விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யும் வகையில் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக 9 இடங்களில் நேரடி கொள்முதல் மையங்கள் திங்கள்கிழமை திறக்கப்பட்டன.

அலங்காநல்லூர் ஒன்றியம் கள்ளிவேலிப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்ட நெல் கொள்முதல் நிலையத்தை, கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அவர் பேசியது:

மதுரை மாவட்டத்தில் 46 இடங்களில் நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில், முதல்கட்டமாக கள்ளிவேலிப்பட்டி, கள்ளந்திரி, புதுதாமரைப்பட்டி, குலமங்கலம், காஞ்சரம்பேட்டை, சோழவந்தான், நாச்சிக்குளம், குமாரம் ஆகிய கிராமங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் ஏறத்தாழ 29 ஆயிரத்து 328 ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதில், 1 லட்சத்து 83 ஆயிரத்து 102 மெட்ரிக் டன் நெல் மகசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் மதுரை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக, 70 ஆயிரத்து 294 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் சன்னரகம் நெல் குவிண்டாலுக்கு

ரூ.1,470-க்கும், பொதுரகம் குவின்டால் ரூ.1,410-க்கும் கொள்முதல் செய்யப்படும் என்றார்.

மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன், சோழவந்தான் சட்டப்பேரவை உறுப்பினர் எம்.வி.கருப்பையா, மதுரை மாநகராட்சி துணை மேயர் கு.திரவியம், பரவை பேரூராட்சித் தலைவர் ராஜா, நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல முதுநிலை மேலாளர் எஸ்.அய்யப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினருக்கு வேளாண்மை செம்மல் விருது

உதகையிலுள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினருக்கு வேளாண்மை செம்மல் விருது வழங்கப்பட்டது.

இது தொடர்பாக, நீலகிரி மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்துள்ளதாவது:

உதகையில் கக்குச்சி பகுதியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் டி.மணியட்டியைச் சேர்ந்த ஈஸ்வர் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு சில்வர் டிப் எனப்படும் ஒயிட் டீ சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக, 47 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கக்குச்சி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் டி.மணியட்டி ஈஸ்வர் மகளிர் சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த சுமதி என்பவருக்கு நீலகிரி மாவட்டத்தில் சில்வர் டிப் எனப்படும் ஒயிட் டீ சிறப்பாக தயாரிக்கப்படுவதையொட்டி அவருக்கு வேளாண்மை செம்மல் என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உழவர் தின விழாவில், இவ்விருதை தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி வழங்கியதாக ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# சேலம் மாவட்டத்தில் ரூ.231.82 கோடியில் நலத் திட்ட உதவிகள்

தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் ரூ.231.82 கோடியில் விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகளும், குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2.50 ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலத்தை சொந்தமாகக் கொண்டு பயிர் செய்யும் 18 முதல் 65 வயது வரை உள்ள அனைத்து சிறு, குறு விவசாயிகள், விவசாயம் சார்ந்த தொழில்கள் மேற்கொள்வோர் இந்தத் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ள தகுதியுடையவர்கள். இதில் உறுப்பினராக சேர குடும்ப அட்டை அவசியம். பதிவு செய்து கொள்ள கட்டணம் ஏதுமில்லை. கிராம நிர்வாக அலுவலரிடம் குடும்ப உறுப்பினர்கள் விவரங்களை தெரிவித்து பதிவு செய்து கொள்ளலாம். இவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.

இதுகுறித்த மேலும் விபரங்களை பெற தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தனித் துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) ஆகியோரைத் தொடர்பு கொள்ளலாம்.

முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தொழிற்பயிற்சி நிறுவனம், கவின்கலை, ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பட்டயப் படிப்பு, இளநிலைப் பட்டப் படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்பு, சட்டம், பொறியியல், மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது. உறுப்பினர்களுக்கு திருமண நிதியுதவிகளும், முதியோர் உதவித்தொகை, விபத்தினால் இறப்பு, ஊனம் உள்ளிட்டவற்றுக்கும், இயற்கை மரணம், ஈமச்சடங்கு போன்றவற்றுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் மூன்றரை ஆண்டுகளில் 27,921 பயனாளிகளுக்கு ரூ.6.68 கோடி மதிப்பில் கல்வி உதவித்தொகை, 10 பயனாளிகளுக்கு ரூ.80 ஆயிரம் மதிப்பில் திருமண உதவித்தொகை, 2,999 பயனாளிகளுக்கு ரூ.2.72 கோடி மதிப்பில் மகப்பேறு நிதியுதவி, 4,978 பயனாளிகளுக்கு ரூ.6.98 கோடி மதிப்பில் இயற்கை மரணம், ஈமச்சடங்கு உதவித்தொகை, 461 பயனாளிகளுக்கு ரூ.4.54 கோடி மதிப்பில் விபத்து மரணம் உதவித்தொகை, 33,868 பயனாளிகளுக்கு ரூ.28.28 கோடி மதிப்பில் முதியோர் உதவித்தொகை, 1,15,119 பயனாளிகளுக்கு ரூ.139.97 கோடி மதிப்பில் ஆதரவற்ற விவசாயக் கூலி உதவித்தொகை என மொத்தம் 1,87,542 பயனாளிகளுக்கு ரூ.231.82 கோடியில் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# தேசிய வேளாண் பயிர்க் காப்பீடு திட்டம்: விவசாயிகளுக்கு அழைப்பு

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் வே. அழகிரிசாமி திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 11 குறு வட்டாரங்களிலும் நெல், மக்காச்சோளம், சோளம், மணிலா, எள், கரும்பு, மற்றும் பருத்தி சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம்.

நெல் நடவு செய்தவுடன் கடன்பெற்ற விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து வழங்க வேண்டும். மக்காச்சோளம், சோளம், மணிலா, எள், கரும்பு, பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகளும் மேற்கண்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். கடன் பெறாத விவசாயிகள் நேரடியாக தங்களது பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் தொடர்பு கொண்டு ஜன. 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

பிரீமியம்: கடன் பெறும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு நெல் சாகுபடிக்கு ரூ. 514, கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு நெல் சாகுபடிக்கு ரூ. 463, மக்காச்சோளம் கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ. 444, கடன் பெறாத விவசாயிகளுக்கு ரூ. 400, சோளம் கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ. 142, கடன் பெறாத விவசாயிகளுக்கு ரூ. 127, மணிலா கடன்பெற்ற விவசாயிகளுக்க ஹெக்டேருக்கு ரூ. 1,097, கடன் பெறாத விவசாயிகளுக்கு ரூ. 987, எள் கடன்பெற்ற விவசாயிகளுக்கு ரூ. 206, கடன்பெறாத விவசாயிகளுக்கு ரூ. 185, கரும்பு கடன்பெற்ற விவசாயிகளுக்கு ரூ. 5,207, கடன்பெறாத விவசாயிகளுக்கு ரூ. 4,687, பருத்தி கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ. 239, கடன்பெறாத விவசாயிகளுக்கு ரூ. 215 வதீம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

விவரங்களுக்கு வட்டார வேளாண் உதவி இயக்குநர்கள் பெரம்பலூர் (9047072766), ஆலத்தூர் (9047072764), வேப்பூர் (9047072763), வேப்பந்தட்டை (9047072768) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# தென்னை நார்க்கழிவில் உரம்: விவசாயிகளுக்கு செய்முறை பயிற்சி

தென்னை நார்க்கழிவில் இருந்து உரம் தயாரிப்பது குறித்து விவசாயிகளுக்கு உடன்குடி வட்டார வேளாண் துறை அதிகாரிகள் செயல்முறை விளக்கமளித்தனர்.

இதுகுறித்து உடன்குடி வட்டார வேளாண் துறை உதவி இயக்குநர் ச.உத்தண்டராமன் கூறியதாவது: உடன்குடி பகுதியில் அதிக அளவில் தென்னை முக்கிய பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. இதில், முக்கிய உப பொருளாக நார் கிடைக்கிறது. நார் பொருளைப் பிரிக்கும் போது அதிலிருந்து அதிக அளவில் நார்த் துகள்கள் கிடைக்கிறது. இதுவே தென்னை நார்க்கழிவு.

இந்த தென்னை நார்க்கழிவில் கார்பன் நைட்ரஜன் விகிதம், லிக்னின் சத்து உள்ளதால் எளிதில் மக்குவதில்லை. இதில் உள்ள சத்துகளும் பயிர்களுக்கு எளிதில் கிடைப்பதில்லை. தென்னை நார்க்கழிவுகளை புளூரோட்டஸ் காளான் வித்துகள் கொண்டு மக்க வைப்பதால் எளிதில் மக்கி உரமாக மாற்றலாம் என்றார் அவர்.

பின்னர் இதுகுறித்த செயல்முறை விளக்கம் விவசாயிகள் மத்தியில் செய்து காண்பிக்கப்பட்டது. ஒரு டன் தென்னை நார்க்கழிவில் கலக்க வேண்டிய புளூரோட்டஸ் காளான், யூரியா ஆகியவற்றை செயல்முறை விளக்கத்தின் மூலம் உரமாக மாற்ற விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இதன்மூலம் 60 நாளில் நன்கு மக்கிய காம்போஸ்ட் உரம் உருவாகும் எனவும் இதற்கான புளூரோட்டஸ் காளான் பொருள்கள்,

உடன்குடி வேளாண் உதவி மையத்தில் விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மானாவாரியில் உளுந்து அமோக விளைச்சல்

பண்ருட்டி வட்டாரத்தில் மானாவாரி பகுதிகளில் உளுந்து பயறு விளைச்சல் அமோகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பண்ருட்டி வட்டாரம், கெடிலம் நதிக்கு தென்பகுதி, முந்திரிக் காடுகளுக்கு இடையே ஊடு பயிராக கம்பு, கேழ்வரகு, கொள்ளு, உளுந்து, காராமணி உள்ளிட்ட பயிர்கள் விவசாயம் செய்யப்பட்டன.

நாளடைவில் ஆடு, மாடுகள் வளர்ப்போர் அவற்றைக் கட்டி பராமரிக்காததால், அவற்றின் மேய்ச்சல் காரணமாக மானாவாரி விவசாயத்தை விவசாயிகள் அடியோடு கைவிட்டுவிட்டனர்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த ஆண்டு மருங்கூர், பேர்பெரியான்குப்பம், முத்தாண்டிக்குப்பம், வரீசிங்கன்குப்பம், காட்டுக்கூடலூர், சாத்திப்பட்டு உள்ளிட்ட கிராமப் பகுதி விவசாயிகள் உளுந்து, பைத்தம் பயறு, கொள்ளு, காராமணி உள்ளிட்ட பயறு வகைகளை மானாவாரியில் பயிரிட்டுள்ளனர். இதில் எதிர்பாராத அளவு நல்ல மகசூல் கிடைத்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்நிலையில்,நடப்பாண்டு பண்ருட்டி ஒற்றியத்துக்கு உள்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள விவசாயிகள் தங்கள் நிலத்தில் (காடாம்புலியூர் தவிர) உளுந்து, பைத்தம் பயறு, காராமணி உள்ளிட்டவைகள் மானாவாரியாக விதைப்பு செய்தனர். இவை தற்போது நன்கு செழித்து வளர்ந்து அறுவடைக்கு தயாராக உள்ளன.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: ஆடு, மாடுகள் வளர்ப்போர் அவற்றைக் கட்டி பராமரிக்காததால், அவற்றின் மேய்ச்சல் காரணமாக மானாவாரி விவசாயம் பாதிக்கப்பட்டது.

இதேபோல் தானே புயலால் முந்திரி, பலா போன்ற பணப் பலன் தரும் மரங்கள் அழிந்து விட்டது. இதனால் வருவாய் இழப்பு ஏற்பட்டது. தற்போது அனைத்து கிராமங்களிலும் உளுந்து, பைத்தம் பயறு, காராமணி விதைப்பு செய்யப்பட்டது.

இவை நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயாராக உள்ளன. மானாவாரி பயிர் செய்வது என்றும், கால்நடைகளை கட்டி பராமரிக்கப்பது என்றும் ஊர் கட்டுப்பாடு போடப்பட்டதால் இப்பலன் கிடைத்துள்ளது என்றனர்.

அண்ணாகிராமம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இளவரசன் (பண்ருட்டி பொறுப்பு) கூறியதாவது: தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தில் உளுந்து, பச்சை பயறு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது. பண்ருட்டி வட்டாரத்தில் கடந்த ஆண்டு சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உளுந்து, பச்சை பயிர் மானாவாரி சாகுபடி செய்யப்பட்டது.

ஏக்கருக்கு 400 கிலோ மகசூல் கிடைத்தது. இந்த ஆண்டு 8 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விதைக்கப்பட்டுள்ளது. சுமார் 30 டன் அளவுக்கு விதை உளுந்து வழங்கப்பட்டுள்ளது. இதில் உற்பத்தி இலக்கு 3 ஆயிரம் டன் என நிர்ணயித்துள்ளோம்.

மழைப் பொழிவு மற்றும் தட்ட வெப்ப நிலை சாதகமாக உள்ளதால், நல்ல மகசூல் கிடைத்துள்ளது. அதே சமயம் காய்புழுவை கட்டுப்படுத்துவதில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

# வெண்டைக்காய் பறிக்கும் கருவி அறிமுகம்

காந்திகிராமம் : காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையத்தில் வெண்டைக்காய் பறிக்கும் கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெண்டைக்காய் பெரும் பாலும் எல்லா மாவட்டங்களிலும் சாகுபடியாகிறது. விளைந்த வெண்டைக்காய்களை கையால் பறிக்கும்போது, அதில் உள்ள சிறிய முட்கள் போன்ற "சுனை'கள் இருக்கும். காய்களை கையால் பறிக்கும் போது சுனைகளால் ரத்தக் காயம் ஏற்பட்டுவிடும். ஒரு மணி நேரத்தில் 2 கிலோ அளவிலான காய்களை மட்டுமே பறிக்க முடியும். காய் பறிக்கையில் காயம் ஏற்படுவதை தடுக்க, பஞ்சாப் விவசாய பல்கலை வெண்டைக்காய் பறிக்க "கத்தரிப்பான்' போன்ற கருவியை கண்டுபிடித்துள்ளது.

இக்கருவியை தமிழக விவசாயிகளுக்காக காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையம் அறிமுகப்படுத்தி உள்ளது. இம்மையத்தின் தொழில்நுட்ப வல்லுனர் ஸ்ரீகுமாரி கூறியதாவது: கருவி மூலம் ஒரு மணி நேரத்தில் 10 கிலோ வெண்டைக்காய் பறிக்கலாம். இதனால் தொழிலாளர் பற்றாக்குறை பிரச்னை தீரும். ஒரு கருவி ரூ.60 க்கு கிடைக்கிறது. விவசாயிகள் தொடர்பு கொண்டால் கருவியை

வாங்கி தருவோம்'', என்றார். இவரை 90438 30622ல் தொடர்பு கொள்ளலாம்.

தினகரன்

## வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில் பயனடையலாம் விவசாயிகளுக்கு அதிகாரி அறிவுறுத்தல்

பெரம்பலூர், : தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயனடையலாம் என வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அழகிரிசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாரங்களிலும் உள்ள 11 குறு வட்டாரங்களிலும் 2014- 15ம்ஆண்டிற்கான தேசிய வேளாண் பயிர்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நவரை பருவத்தில் நெல், மக்காச்சோளம், சோளம், மணிலா, எள், கரும்பு, பருத்தி சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் சேர்ந்து பயனடையலாம். இப்பருவத்தில் நெல் நடவு செய்தவுடன் கடன் பெற்ற விவசாயிகள் தங்கள் பகுதியிலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விண்ணப்பம் பூர்த்தி செய்து வழங்க வேண்டும். மேலும் மக்காசோளம், சோளம், மணிலா, எள், கரும்பு, பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகளும் தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். கடன் பெறாத விவசாயிகள் நேரடியாக தங் கள் பகுதியிலுள்ள வேளாண் விரிவாக்க மையங்களை தொடர்புகொண்டு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து வழங்க வேண்டும். ஜனவரி 31ம்தேதி இதற்கான கடைசி நாளாகும். பிரீமியம் தொகையானது

கடன்பெறும் விவசாயிகளுக்கு 1 ஹெக்டர் நெல் சாகுபடிக்கு ரூ.514, கடன் பெறாத விவசாயிகளுக்கு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 1 ஹெக்டர் நெல் சாகுபடிக்கு ரூ. 463 ஆகும். மக்காச்சோளம் கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.444, பெறாத விவசாயிகளு க்கு ரூ.400. சோளம் கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.142, பெறாத விவசாயிகளு க்கு ரூ.127. மணிலா கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.1,097, பெறாத விவசாயிகளுக்கு ரூ.987. எள் கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.206, பெறாத விவசாயிகளுக்கு ரூ.185. கரும்பு கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.5,207, பெறாத விவசாயிகளுக்கு ரூ.4,687. பருத்தி கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.239, பெறாத விவசாயிகளுக்கு ரூ.215 வதீம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.
இதனால் எதிர்பாராமல் ஏற்படும் வெள்ளம், புயல் வறட்சியால் பாதிக்கப்பட் டால் சம்மந்தப்பட்ட தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் இழப்பீடாக விவசாயிகளுக்கு தங்கள் கணக்கில் வரவு வைக்கப்படும். இது தொடர்பான சந்தேகங்களுக்கு அருகிலுள்ள வட்டார வேளாண் உதவி இயக்குநர்களை நேரில் அணுகி விவரம் பெற்றுக்கொள்ளலாம். மேலும் வட் டார வேளாண் உதவி இயக்குநர்களை செல்போன் எண்களிலும் தொடர்புகொண்டு பயன் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்த வழிமுறை

சேதுபாவாசத்திரம், : நடப்பு சம்பா நெற்பயிரில் பரவலாக தென்படும் இலை சுருட்டு புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விளக்கம் அளித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் உள்ள ஊமத்தநாடு, ரெட்டவயல், பெருமகளூர், முதுகாடு, கொளக் குடி, மணக்காடு போன்ற பல்வேறு பகுதிகளில் நடப்பு ஏரி பாசன சம்பா சாகுபடி செய்துள்ள பயிர்களில் இலைச் சுருட்டு புழுவின் தாக்குதல் தற்போதுள்ள தட்பவெப்ப நிலை மாற்றத்தால் பரவலாக தென்படுகிறது. இந்த பூச்சி யின்

தாக்குதலால் பயிர்களில் உள்ள பச்சையத்தை சுரண்டி தின்று உயிர் வாழ்வதினால் பயிர்களின் வளர்ச்சி குன்றி அதிக மக சூல் கிடைக்க கேடு விளை விக்கும். எனவே சம்பா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தளைச்சத்து கொடுக்கக்கூடிய யூரியா உரத்தை அதிகம் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். மேலும் தாய் அந்து பூச்சி முட்டையிடுவதை தடுப்பதற்கு இரவு நேரங்களில் விளக்கு பொரி வைத்து அந்த பூச்சியினை அழித்து தடுக்கலாம். அல்லது முட்டை ஒட்டுண்ணி ட்ரைகோ டிரைம்மா கைலோனிஸ் ஏக்கருக்கு 40 ஆயிரம் என்ற விகிதத்தில் நட்ட 15 ம் நாள் முதல் 5 அல்லது 6 முறை இட்டு கட்டுப்படுத்தலாம். 10 சதவீத்திற்கு மேல் பயிர்களில் தாக்குதல் தென்பட்டால் புரபனோபாஸ் என்ற மருந் தினை ஏக்கருக்கு 400 மில் லியை 200 லிட்டர் தண்ண ீரில் கலந்து தெளிக்க வேண் டும். அல்லது இண்டோஷாகார்ப் 14.5 எஸ்.சி என்ற மருந்தினை ஏக்கருக்கு 80 மில்லியை 200 லிட்டர் தண் ணரீல் கலந்தும் அல்லது வேப்ப எண்ணெய் 0.5 சதத்தை ஏக்கருக்கு ஒரு லிட்டர் 200 லிட்டர் தண் ணரீல் கலந்து தெளித்தும் கட்டுப்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளார்.ரம்யாசத்தியநாதன் கல்வியியல் கல்லூரியில்

## முட்டை விலை 3 நாளில் 25 காசுகள் குறைந்தது



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலையில் மேலும் 5 காசுகள் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த 3 நாட்களில் 25 காசுகள் வரை விலை குறைந்துள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில், பொங்கல் பண்டிகையையொட்டி முட்டை விலை தமிழகத்தில் குறைந்து வருவதால், விலையை மேலும் குறைக்க முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, முட்டை விலையில் மேலும் 5 காசுகள் குறைக்கப்பட்டு, ஒரு முட்டையின் விலை 305 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த 3 நாட்களில் முட்டை விலை 25 காசு வரை குறைந்துள்ளது. மேலும், ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ. 52 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.69 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்): சென்னை- 350, பெங்களூரு- 340, மைசூர்- 325, மும்பை- 363, விஜயவாடா- 313, கொல்கத்தா- 360, பர்வாலா- 305 காசுகள்.

## கோவையில் தேயிலைத்தூள் ஏலம் ரூ.3.11 கோடிக்கு விற்பனை



கோவை: கோவை ஏல மையத்தில் ரூ.3.11 கோடிக்கு தேயிலைத்தூள் விற்றது. இதில் ஏற்றுமதி ரகத்திற்கு கிலோ ஒன்றுக்கு 8 பைசாவும், உள்ளூர் ரகத்திற்கு கிலோ ஒன்றுக்கு 42 பைசாவும் கூடுதலாக கிடைத்தது. கோவை தேயிலை ஏல மையத்தில் நடந்த விற்பனையில் தேயிலைத்தூள் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 3.36 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில், 2.76 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரியாக ஒரு கிலோ ^80.32 விலை கிடைத்தது. மொத்தம் ரூ.2.22 கோடிக்கு விற்றது. ஏற்றுமதி ரகம் (லீப்) 1.51 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்ததில் 1.18 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரியாக ஒரு கிலோ ரூ.74.79க்கு வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். மொத்தம் ^88 லட்சத்திற்கு வர்த்தகம் நடந்தது.

கடந்த வார நடந்த ஏலத்துடன் ஒப்பிடுகையில், ‘உள்ளூர் ரகம் கிலோவுக்கு 42 பைசாவும், ஏற்றுமதி ரகம் 8 பைசாவும் அதிகரித்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் ரூ.3.11 கோடிக்கு விற்பனையானது. இது கடந்த வாரம் விற்றதை விட ரூ.6 லட்சம் அதிகமாகும். கடந்த சில வாரங்களாக விற்பனை விலை, விற்பனை அளவு அதிகரித்து வருவதாக ஏல மைய செயலாளர் ஸ்ரீகுமார் கூறினார்.

# அமராவதி அணையிலிருந்து தண்ணீர் இன்று திறப்பு

சென்னை – திருப்பூர் மாவட்டம் அமராவதி அணையில் இருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்து விட முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உத்தரவிட்டுள்ளார்.

இதன் மூலம் 47,117 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.இது குறித்து முதலமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப்பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடக்கோரி வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப்பகுதிகளுக்கு இன்று (20.1.2015) முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 47,117 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

## அமராவதி அணையில் இருந்து இன்று தண்ணீர் திறப்பு முதல்–அமைச்சர் உத்தரவு



சென்னை,

தமிழக முதல்–அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையில் இருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப்

பகுதிகளுக்கு பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளை ஏற்று, திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.

இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 47,117 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.